**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 1 Of 2017**

**<u>27.08.2024</u>**

**RW1 – திரு. மனோகரன்**
குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

01.01.2024 முதல் நான் எதிர்மனுதாரர் சங்கத்தில் செயலாளராக பணிபுரிகிறேன். மனுதாரர் ராமலிங்கம் பணியிலிருந்தபோது எதிர்மனுதாரர் சங்கத்தில் நான் எந்த பதவியிலும் இல்லை. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பணை எதுவும் எனக்கு வரவில்லை. மனுதாரர் 31.07.2011 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். பணி ஓய்வு பெறும்போது மனுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதாவது நிலுவையில் இருந்ததா என்றால் ஒழுங்கு நடவடிக்கை எதுவும் இல்லை. மனுதாரருக்கு எங்களுடைய சங்கத்தில் யாரைவாவது வேலையில் சேர்க்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் மனுதாரருக்கு இச்சங்கத்தில் வேலை செய்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் பணியிலிருக்கும்போது அவருடைய கடமைகள், பொறுப்புகள் என்ன என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை ஆனால் அவருக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் உள்ளது.

எங்கள் சங்கத்தில் 01.04.2008 முதல் புதிய ஊதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஊதிய ஒப்பந்தப்படி மனுதாரருக்கு சம்பளம் மாற்றியமைக்கப்பட்டு ரூ.23,207/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சம்பளத்தின் அடிப்படையில் மனுதாரர் தொழிலாளர் உதவி ஆணையரிடம் மனு செய்து பணிக்கொடை பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த உத்தரவுக்கு மேல் நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை. அந்த உத்தரவின்படி மனுதாரருக்கு

பணிக்கொடை கொடுக்கப்பட்டது. மனுதாரர் பணியிலிருக்கும்போது கடனை வசூல் செய்யவில்லை என்கின்ற காரணம் காட்டி அவருடைய ஓய்வூதிய பலன்கள் நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு நிறுத்தி வைப்பதற்கு முன்பு மனுதாரருக்கு காரணம் கோரும் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுத்துள்ளோம். அந்த அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சங்கத்தின் தலைவருக்கும், செயலாளருக்கும் சங்கத்தின் காசோலையில் கையொப்பம் இட கூட்டு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் சங்கத்தில் பயிர்கடன், நகைக்கடன், மத்தியகாலக்கடன் ஆகியவற்றை தலைவரின் ஒப்புதல் இல்லாமல் வழங்க முடியாது என்றால் சரிதான். தவணைத்தொகை கடன் குறித்து மேலதிகாரியிடம் அனுமதி பெற்றுத்தான் தாவா தொடரமுடியும் என்றால் சரிதான்.

கடன் தொகை குறித்து தாவா தாக்கல் செய்ய மனுதாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை கடன் வசூல் செய்வது மனுதாரர் பொறுப்பு. மனுதாரர் ஓய்வு பெறும்போது பணி சம்பந்தமாக அவர் மீது எந்த புகாரும் இல்லை என்றால் சரிதான். எங்கள் சங்கத்தில் கணக்குகள் தணிக்கை செய்யப்படும் என்றால் சரிதான்.. அந்த தணிக்கை யில் எங்கள் சங்கத்திற்கு வரவேண்டிய தொகை மற்றும் செலவுத்தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் சங்கத்திற்கு வரவேண்டிய கடன் தொகை இருந்தால் கடன் தொகை, வட்டி, தவணை தவறிய வட்டி, செலவுத் தொகையும் சேர்த்துதான் வசூல் செய்வோம் என்றால் சரிதான். எங்களுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையான ரூ.5,39,000/– தொகையை வட்டி மற்றும் பிற தொகைகளையும் சேர்த்து வசூல் செய்துவிட்டோம் என்றால் சரிதான். மனுதாரர் எங்கள் சங்கத்திற்கும், சங்க துணைப்பதிவாளர் மற்றும் மாநில பதிவாளருக்கும் ஓய்வு கால பலன்களை வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த கடிதங்களுக்கு பதில் கொடுக்கப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண

வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு மனுதாரருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரருக்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள தொகை ரூ.4,75,280/-, 27.01.2012 அன்று ரூ.2,51,562/- மற்றும் 06.05.2012 அன்று ரூ.73,000/- 06.11.2012 ல் ரூ.55,000/-மும், 11.02.2014 அன்று ரூ.2,00,000/-மும், 10.06.2014 ல் ரூ.2,01,348 மும், 17.10.2014 அன்று ரூ.1,40,000/-மும், 07.09.2015 அன்று ரூ.1,58,065/-மும் தொகை வழங்கப்பட்டுள்ளது. நான் சொன்ன தொகைகளை மனுதாரருக்கு ஓய்வு பெற்ற தேதியில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு பணி ஓய்வு பெற்ற தேதியில் தரவேண்டிய 240 நாட்களுக்கான சம்பளம் 19.06.2014 அன்று ரூ.1,79,965/- கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தொகை மனுதாரருக்கு எப்போது, எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த தொகையும் மனுதாரருக்கு ஓய்வு பெற்ற தேதியில் கொடுக்கவில்லை.

புதிய ஊதிய ஒப்பந்தப்படி மனுதாரருக்கு சேரவேண்டிய வருங்கால வைப்பு நிதி தொகையை மனுதாரருக்கு காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகைக்கான வட்டியை மனுதாரருக்கு சங்கம் கொடுக்கவேண்டும் என்றால் பணிக்கொடைக்கு தவிர அனைத்து தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கும் வட்டி கணக்கிடப்பட்டு மனுதாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தொகைகளை மனுதாரருக்கு வட்டியுடன் கொடுத்ததை காண்பிக்க கணக்கீட்டு பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மனுதாரருக்கு தொகை எவ்வளவு வட்டியுடன் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரங்கள் தெரியாமல் நிர்வாகத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் பணிப்பதிவேட்டில் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட தொகைகள் குறித்த விபரம் இருக்கும் என்றால்

சரிதான், அந்த பணிப்பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மனுதாரர் மனுவில் கோரியுள்ள தொகையை கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**அனுமதியின்பேரில் மறுவிசாரணை**

இன்றைய தேதியில் எதிர்மனுதாரர் சங்கத்தில் தலைவர் இல்லாததால் நிர்வாக பொறுப்பு அனைத்தும் சங்கத்தின் செயலாளரான என்னை சேர்ந்தது.

**அனுமதியின்பேரில் மறு குறுக்கு விசாரணை**

மனுதாரர் ஓய்வு பெறும் தேதியில் தலைவர் பதவியில் யாரும் இல்லை, செயலாட்சியர் இருந்தார். தற்போதும் அவர் செயலாட்சியராக உள்ளார். அவருக்கு தலைவருக்கான அதிகாரம் உள்ளது என்றால் சரிதான்.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem.